**DEPOSITION OF WITNESS**
*(Chapter XXIII Code of Criminal Procedure)*
***Assistant Sessions Judge, Sankari***
**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**

*Calender* }
*Miscellaneous* }
*Preliminary Register* }
*Sessions* } *Case No.**SC.115/2023***

*Deposition of Witness* { ***PW.16***
{ *Prosecution*
{

*Name* : *முத்துசாமி*
*Father's Name* :
*Taluk* :
*Calling* :
*Religion* :
*Age* :

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.01.2026.*

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ஆம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.16 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

முதல் விசாரணை

நான் தற்போது அரியலூர் மாவட்டம், கயர்லாபாத் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 16.04.2018 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் அப்பு என்பவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை அப்போதைய ஆய்வாளர் செல்வம் அவர்கள் புலன் விசாரணை செய்து வந்த நிலையில், அவர் 15.1.2019 அன்று பணி மாறுதலாகி சென்றுவிட்டதால் அவர் புலன் விசாரணை முடிக்காமல் இந்த வழக்கு

நிலுவையில் இருந்து வந்தபோது, நான் மேற்படி காவல் நிலையத்திற்கு ஆய்வாளராக பொறுப்பேற்று இந்த வழக்கினை 15.10.2019 அன்று எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கு கோப்பினை பார்வையிட்டு ஏற்கனவே ஆய்வாளர் விசாரித்து பதிவு செய்த வாக்குமூலங்களை பார்வையிட்டும், சம்பவயிடத்தை பார்வையிட்டும், சாட்சிகள் அவரிடம் கூறியதையே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை. இந்த வழக்கின் புலன் விசாரணை முழுவதையும் முந்தைய ஆய்வாளர் முடித்துவிட்ட நிலையில், நான் வழக்கின் தன்மைக்கு ஏற்றவாறு குற்ற மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அது அ.சா.ஆ.11. பின்பு 02.12.2019 அன்று எதிரிகள்மீது இதச பிரிவுகள் 294(பி), 307, 342, 506(2), 354 உடன் இணைந்த 34 ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 15.10.2019 அன்று சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகளை விசாரித்தேன். நான் சொன்னதுபோல் சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் நான் சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சி விசாரணை செய்யவில்லை என்றால், சரியல்ல. அ.சா.15 சரியாக புலன் விசாரணை செய்யாமல் தயார் செய்து வைத்திருந்த வாக்குமூலங்கள், கோப்புகளின் அடிப்படையில் நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. 2 ம் எதிரி கொடுத்த புகாரின் பேரில் அ.சா.1, 2 ன்மீது பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 59/2018 வழக்கின் நிலைப்பற்றி எனக்கு தெரிய வந்ததா என்றால், அந்த புகாரில் உண்மை இல்லையென்று முந்தைய ஆய்வாளரே வழக்கை முடித்து வைத்து விட்டார். அந்த குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி, புகார்தாரருக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்ட தேதி தெரியுமா என்றால், தெரியாது. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால், சரியல்ல.

ஒப்பம்/-முத்துசாமி,

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.